## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## அழுகிய வாழைப்பழம்

---

அன்று சிவராத்ரி.கோயிலில் கூட்டமோ கூட்டம்.பரமகஞ்ச பாகவதர் அன்று பெரியபுராணம் பற்றி உபன்யாசம் செய்யப் போகிறார். அந்த சிறிய ஊரில் அவரை விட்டால் இந்த மாதிரி ஆன்மீக சமாச்சாரத்துக்கு எல்லாம் வேறு கதி இல்லை என்பதாலோ, அதற்கு மேல் அடியார் வரலாற்றில் என்ன இருக்கப் போகிறது என்ற எண்ணத்தாலோ அவ்வூர் மக்களும் அதற்கெடுத்தாலும் பாகவதையே கூப்பிடுவது வழக்கம்.

பாகவதரைப் பற்றி ஒரு பாகவத புராணமே எழுதலாம்.எச்சில் கையால் கூட காகத்தை விரட்ட மாட்டாத கருமி. பேச்சைக் கூட அளந்து தான் பேசுவார். தான் சொல்லும் கருத்துக்கள் எங்கே மக்களுக்கு நற்கதி வழங்கிவிடுமோ என்ற பயம் அவருக்கு உண்டு.

கருமித் தனத்துக்கு ஒரு தேவதை இருந்தால் அவசியம் இவர் காலடியில் தான் கிடப்பான். எப்படி எந்த வழியில் பணம் சேர்க்கலாம், அதை மிச்சப்படுத்தலாம், இதற்கு இவர் பல்கலைக்கழகமே வைத்து பயிற்சி தருவார் என்றால் பாருங்களேன்!!!

கூட்டம் கூடுவதைப் பொறுத்தும் அன்பர்கள் தட்சிணை போடும் அளவைப் பொறுத்தும் தான் அவர் உபன்யாசம் இருக்கும். அப்பர் சம்பந்தர் வரலாற்றை ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுவார் என்றால் பாருங்கள்!

தனக்கும் தன் குடும்பத்துக்கும் கூட நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யாத கஞ்சாகவே வாழ்ந்தார்.காலம் ஓடியது, மரணம் வந்தது. தான் உபன்யாசம் செய்து மக்களுக்கு சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னதால் தனக்கு சொர்க்கமே கிடைக்கும் என்று மகிழ்ச்சியிலும் குருட்டு நம்பிக்கையிலும் இறந்தும் போனார். ஆனால் அவரை எம தூதர்கள் நரகத்தில் இட்டு வாட்டினர்.

அவரால் பொறுக்கவே முடியவில்லை. நியாயம் பேச ஆரம்பித்தார். தனது உபன்யாசத்தின் பலனை வைத்து சொர்க்கத்துக்கு அனுப்ப வாதாடினார்.

<u>அதற்கு எமன் கூறிய தீர்ப்பு:</u>

* உபன்யாசம் மக்கள் சேவைக்கு ஏற்பட்டது. நீயோ அதைப் பிழைப்புக்கு எனப் பயன் படுத்தினாய்.

* வடிகட்டிய கஞ்சனாக இருக்கிறாய். அதிலும் முதலில் உன் குடும்பத்துக்குக் கூட நீ செய்ய வேண்டிய கடமைகளைக் கருமித்தனத்தால் செய்யவில்லை.அதனால் உன் வாரிசுகளும் மிகப்பெரிய கருமிகளாகினர்.
* பணத்தின் வரவை அறிந்து நீ உபன்யாசம் செயதது மஹாபாவம்.ஏன் என்றால் நீ சொன்ன கருத்துக்கள் அனைத்தும் எதையுமே எதிர்பார்க்காமல் பல ரிஷிகளும் மஹான்களும் அன்பர்களும் தங்கள் ஆழ்ந்த அனுபவத்தால் உலகிற்கு சொன்னவை.

இவற்றைக் கேட்ட பரமகஞ்ச பாகவதர்,"சரி, ஏதாவது ஒரு நல்லது கூடவா நான் செய்யவில்லை?"

உடனே சித்ரகுப்தனைக் கூப்பிட்டார் எமன். பரமகஞ்ச பாகவதரின் பாவபுண்ணியக் கணக்குவழக்கை அலசிப்பார்த்ததில் ஒரு சிறிய தானம் செய்தது கிடைத்தது. அது என்ன?

ஒரு முறை வீட்டின் வெளியில் உட்கார்ந்து கொண்டு ஒரு வாழைப்பழத்தை உண்டார். அப்போது ஒரு பிச்சைக்காரன் வந்து பிட்சை கேட்டான், வீட்டின் உள்ளே இருக்கும் தன் மனைவி சோற்றை பிட்சை இடுவாள் அது செலவு என்று எண்ணிய இவர், தன் கையில் இருந்த பழத்தின் மிகவும் கனிந்த ஒரு பகுதியை மட்டும் பிட்டு அவனுக்கு பிட்சை அளித்துத் துரத்தியும் விட்டார்.

அழுகிக்கனிந்த பழம் தந்த பலனாக சொர்க்கத்தின் வாசல் படியை மட்டும் மிதித்துப் பார்த்து வரும் தகுதி அவருக்குக்குக் கிடைத்தது. அவரும் சொர்க்கத்தின் வாசல்படிக்குச் சென்றுவரப் புறப்படும் போது அவரது பின்னே அவர் புண்ணியத்தை வைத்துக் கொண்டு மற்றொருவனும் புறப்பட்டான்.**இக்கதைக்கு இரண்டு வகை முடிவுகள் தரப்படுகின்றன.**அப்போது,

"***அடேய்! நான் வாழைப்பழ தானம் செய்தேனாக்கும்! அதனால் தான் சொர்க்கத்தின் வாசல் வரை செல்ல இருக்கிறேன். நீ ஏனடா வருகிறாய்? போடா போ!" என்று துரத்தி அப்போதும் தன் கருமித்தன்மையை வெளிப்படுத்த அந்த சொர்க்கவாசல் தரிசனத்தையும் எமன் ரத்து செய்து மிகக்கொடிய நரகத்தில் சிறையில் இட்டார்.***

<u>மற்றொரு முடிவு</u>

*"அடடே! வா அப்பனே! இப்போதாவது எனக்கு யாருக்காவது உதவி செய்யும் விழிப்புணர்வு ஏற்பட்டதே! என் சிறிய வாழைப்பழ தானபலனை அப்படியே உனக்குத் தருகிறேன்; நீ போய் வா செர்க்கத்துக்கு" என்று அவர்பின் வந்த அந்த மனிதனுக்குத் தன் பலனை அவர் தானம் செய்தவுடன், அம்மனிதனே இந்திரனாக மாறி இவரை ஆசீர்வதித்து நீண்ட சொர்க்கவாசம் அருளினான்.*

பிழைப்புக்காக உபன்யாசம் செய்தாலும் அது இறைவனைப் பற்றியது ஆதலால், இவருக்கு ஒரு நற்கதியைச் செய்து பார்க்கலாம் என்று இந்திரன் வந்தானாம். எனவே என்றுமே தானதர்மங்களும் சேவைகளும் நமக்கு நற்கதி தரும்.